# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

*************

முறையீட்டு மனு எண்: 290/2016/பே

ஆணை எண்: 210/2017

நாள் : 22–08–2017

**திரு. என். சந்திரசேகரன்,**
**11/156 கோடேரி,**
**கோடேரி அஞ்சல்,**
**நீலகிரி – 643 213.** — முறையீட்டு மனுதாரர்

**செயல் அலுவலர்,**
**வரித்தண்டலர்,**
அதிகரெட்டி பேரூராட்சி,
பாலகொலா, அதிகரெட்டி அஞ்சல்,
**நீலகிரி மாவட்டம்.** — எதிர் மனுதாரர்

## ஆணை

நீலகிரி மாவட்டம், 11/156, கோடேரி கிராமம், கோடேரி அஞ்சல் கிராமத்தைச் சேர்ந்த திரு. என். சந்திரசேகரன் என்பவர் தனது 05.04.2016ம் தேதிய முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களது கடிதம் ந.க.எண்.5616/2015/இ/நாள்:20.06.2016ன்படி இம்முறை மன்ற நடுவத்தில் 11.04.2016ல் பெறப்பட்டு 290/2016 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. என். சந்திரசேகரன், அதிகரெட்டி செயல் அலுவலர், அதிகரெட்டி பேரூராட்சி அவர்களுக்கு அனுப்பிய தனது 06.01.2016ம் நாளிட்ட புகார் மனுவில் கீழ்கண்ட விவரங்கள் கேட்டுள்ளதாகவும் அதற்கு மேற்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அளித்த பதில் குறித்த விவரங்களை புகார் மனுவாக இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். புகார் மனுவின் விவரம் கீழ்கண்டவாறு:-

தான் தகவல் பெற 06.01.2016-ல் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு மனு அளித்தாகவும் மேற்படி மனு 08.01.2016-ல் செயல் அலுவலருக்கு கிடைத்துள்ளதாகவும், செயல் அலுவலர் அதிகரெட்டி அவர்களின் பதில் அறிக்கையில் 10.02.2016-ம் தேதியில் கையொப்பமிட்டு மேற்படி கடிதம் தனக்கு 18.02.2016-ல் அனுப்பபட்டு 20.02.2016-ல் கிடைக்கப்பெற்றது என குறிப்பிட்டுள்ளார்.

தான் ஏற்கனவே தகவல் பெறும் உரிமை சட்டம் 2005-ன்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ள விவரங்களுக்கு, மேற்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர், வ. எண்.1 ல் கொடுக்கப்பட்ட தகவல் பழைய குடியிருப்பு என தகவல் தந்துள்ளதாகவும் அடுத்து கேட்ட தகவலுக்கு **வரிசை எண் 2,3,4,5** ஆக 4 கேள்விகளுக்கு கேள்வி எழவில்லை என பதில் தந்துள்ளதாகவும் கேள்வி எழவில்லை என்றால் என்ன என்று தெரியவில்லை, இதன் மூலம் முறைகேடு நடந்துள்ளது தெளிவாக காட்டுகிறது எனவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். **வரிசை எண். 6ல்** கேட்கப்பட்ட கேள்விகளுக்கு விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் இல்லை என தெரிவித்துள்ள நிலையில் பேரூராட்சியின் அனுமதி பெறாமல் கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு விதி மீறிய கட்டிடம் எனவும் இதனை தெளிவுபடுத்தவும் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுள்ளதாகவும் தனது முறையீட்டில் தெரிவித்துள்ளார்.

**வரிசை எண்.11**-க்கான கேள்வியான முந்தைய செயல் அலுவலர்கள் பிளான் அப்ரூவல் இல்லாத புதிய கட்டிடங்களுக்கு பழைய குடியிருப்பு கட்டிடங்கள் என்று கூறி குறைந்த வரி விதிப்பு செய்து பேரூராட்சிக்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளனரா என்ற கேள்விக்கு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடிதத்தில் **இல்லை** என பதில் தந்துள்ளதாகவும், இதன் மூலம் பேரூராட்சிக்கு இழப்பீடு செய்துள்ளது தெளிவாக தெரிவதாகவும் தனது முறையீட்டில் தெரிவித்துள்ளார். அதிகரெட்டி பேரூராட்சியில் புதியதாக கட்டிய மாடி வீட்டிற்கு பழைய குடியிருப்பு என தகவல் தந்துள்ளதாகவும் இது குறித்து தான் விதி மீறிய கட்டிடம் எனவும் இதனை தெளிவுபடுத்தவும் பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுள்ளதாகவும், வரிசை எண்.7 முதல் 10 கேள்விகளுக்கு சரியான பதில் வழங்காமல் விவரம் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் விவரம் அறியவும் என பதில் தந்துள்ளதாகவும் , அவ்வாறு பதில் தராமைக்கான காரணம் என்ன எனவும் வினவியுள்ளதாகவும் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார்.

மேலும் தகவல் பெறும் உரிமை சட்ட கேள்வி எண்.11-ல் கேட்கப்பட்ட கேள்விக்கு செயல் அலுவலர் விதி மீறிய கட்டிடங்கள் ஏதும் இல்லை என பதில் தந்துள்ளதைத் தொடர்ந்து பேரூராட்சிக்கு இழப்பீடு செய்துள்ளது தெளிவாக தெரிவதாகவும், காரணம் புதியதாக கட்டிய மாடி வீட்டிற்கு, பழைய குடியிருப்பு என தகவல் தந்துள்ளதாகவும் இது குறித்து தான் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிய புகார் நகல் இணைத்து சமர்ப்பித்துள்ளதாகவும் முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளார். மேற்குறிப்பிட்டவாறு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல்கள் வழங்கப்படாதது குறித்தும் முரண்பாடுகள் குறித்தும் மனுதாரர் மேற்படி சட்ட சரத்துகளின்படி சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டு அலுவலரிடமே முறையீடு செய்து கொள்ளவேண்டும். இருப்பினும், புகாரில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட புகார்கள் குறித்து பரிசீலிக்கப்பட்டு உரிய விசாரணை மற்றும் நடவடிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தால் மேற்கொள்ளப்பட்டன.

புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்.9/143 பழையது, கதவு எண்.11/243 புதியது எனவும் இந்த வீடு கோடேரி கிராமத்தில் வார்டு எண்.11-ல் கவுன்சிலராக உள்ள திரு. என். மணி என்பவரின் தம்பி திரு. ராமன் என்பவரின் வீடு எனவும், செயல் அலுவலர் இநத வீட்டிற்கு குறைந்த வரிவிதிப்பு செய்து அவர் ஆதாயம் பெற்றுள்ளது தனக்கு தெரியும் எனவும் எனவே சம்பந்தப்பட்ட செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் தனது முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி முறையீட்டு மனுவின் மீது விளக்க அறிக்கை அனுப்பி வைக்க கோரி அதிகரெட்டி செயல் அலுவலர் அவர்களுக்கு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.671/2016/பே நாள்:24.06.2016 மற்றும் 05.08.2016 அனுப்பியமைக்கு அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.245/2016/நாள்:18.08.2016ல் கீழ்கண்ட விவரப்படி விளக்க கடிதங்கள் சமர்ப்பித்துள்ளார்.

அதிகரெட்டி பேரூராட்சி 11 வது வார்டு உறுப்பினர் திரு. என். மணி என்பவரின் சகோதரர் திரு. என். ராமன் என்பவருக்கு கோடேரி பேரூராட்சி வார்டு எண். 11 கதவு எண்.9/143ல் அவரது மனைவி திருமதி. ஆர். மீனாட்சி என்பவர் பெயரில் வரி விதிப்பு எண்.3626 ன்படி பழைய ஓட்டு வீடு இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இதனை மேற்படி வீட்டின் உரிமையாளர் இடித்து புதிய RCC கட்டிடம் கட்ட மேற்படி நபர் அதிகரெட்டி பேரூராட்சிக்கு 09.12.2014-ல் கட்டிட அனுமதி கோரியதின் பேரில்

அதிகரெட்டி பேரூராட்சி உத்திரவு ந.க.எண். 780/2014 நாள்:06.01.2015 ன்படி கட்டிட அனுமதி வழங்கப்பட்டதாகவும் கட்டிட அனுமதி வழங்கும்போது காலிமனை வரி உட்பட கட்டணம் ரூ.9700/- வசூலிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டிடப் பணி முடிக்கப்பட்டு உரிமையாளரிடமிருந்து 12.08.2016ல் வரி நிர்ணயம் செய்யக் கோரி மனு பெறப்பட்டதினை தொடர்ந்து மேற்படி இடத்தினை ஆய்வு செய்து புதுப்பித்தல் கட்டணம் (காலிமனை வரிஉட்பட) ரூ.3.340/- வசூலிக்கப்பட்டு, 2016-17 முதலாவது அரையாண்டு முதல் சொத்து வரி நிர்ணயம் வரி விதிப்பு எண்.6052-ன் மூலம் நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட கதவு எண்.9/143க்கு 2014-15 வரை பழைய வரித்தொகை அரையாண்டிற்கு ரூ.33/- ஆகவும் தற்போது 2016-17ம் ஆண்டில் புதிய சொத்து வரியாக அரையாண்டிற்கு ரூ.924/- ஆகவும் நிர்ணயிக்கப்பட்டு இடைப்பட்ட காலத்தில் கட்டிட அனுமதி மற்றும் புதுப்பித்தல் கட்டணத்துடன் விதி முறைகளின்படி காலிமனை வரி வசூலிக்கப்பட்டுள்ளது எனவும் இதனால் பேரூராட்சிக்கு வரி இழப்பு ஏதும் நிகழவில்லை எனவும் பேரூராட்சி செயல் அலுவலர், தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து முறையீட்டு மனுதாரரின் நேரடி வாக்குமூலம் பெற வேண்டி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.290/2016/பே/நாள்:29.08.2016ல் அனுப்பட்டு முறையீட்டு மனுதாரரின் நேரடி வாக்குமூலம் இம்முறை மன்ற நடுவ அமைப்பில் 29.09.2016 பெறப்பட்ட விவரம் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

"..திரு. சந்திரசேகரன் என்பவர் அதிகரெட்டி பேரூராட்சி, கோடேரி என்ற கிராமத்தில் வசித்து வருவதாகவும், 05.04.2016-ம் நாளிட்ட புகார் மனு தன்னால் கொடுக்கப்பட்டதாகவும், அதிகரெட்டி பேரூராட்சியில் சில வீடுகள் விதிகள் மீறி கட்டப்பட்டுள்ளதாகவும் அவை யாவும் அங்கீகாரமற்றவை எனவும் தெரிவித்துள்ளார். மேலும் சில வீடுகள் புதிய குடியிருப்பாக பெயர் மாற்றம் செய்து வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், கதவு எண். 9/81 சம்பந்தமில்லாத இடத்தில் உள்ளது எனவும் ஒரு இடத்தில் இருக்கும் வீட்டிற்கு வேறு எண் கொடுக்கப்பட்டுள்ளதாவும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

கோடேரி கிராமத்தில் திரு. நந்தி (கௌடர்) என்பவர் சர்வே எண்.966/3-ல் வீடு கட்டியிருப்பதாக தெரிவித்திருந்தாலும் அவர் சர்வே எண். 938/3 ல் தான் வீடு கட்டியுள்ளார் எனவும் தெரிவித்துள்ளார். மேற்படி நபர் கட்டியிருக்கும் வீடு பாதி தன்னுடைய வீட்டு மனை எனவும் மீதமுள்ள இடம் கிராம நத்தத்திற்கு சொந்தமான இடம் எனவும் திரு. நந்தி கௌடர் தெரிவித்துள்ள சர்வே எண்.966/3 ல் பத்திரப்பதிவு செய்துள்ளதில் பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளதாக தனது வாக்குமுலத்தில் பதிவு செய்துள்ளார். இதற்கு காரணமான அலுவலர்கள்

மீது நடவடிக்கை எடுக்குமாறும், தனது தகர வேலியால் அமைக்கப்பட்ட வீட்டிற்கு ரூ.66/- என வரி விதிப்பு செய்துள்ளதாகவும், திரு. நந்தி என்பவர் கட்டியுள்ள ரூ.40.00 லட்ச பெறுமானமுள்ள வீட்டிற்கு ரூ.44/- வரி விதிப்பு செய்துள்ளதாகவும், திரு. நந்தி என்பவரின் மனைவி முன்னாள் தாசில்தார் எனவும் இவர் ஓய்வு பெறுவதற்கு முன்னர்தான் இந்நிகழ்வுகள் நடந்ததாகவும், கதவு எண்கள் தவறாக மாற்றப்பட்டுள்ளதாகவும், தனது வாக்கு மூலத்தில் திரு. சந்திரசேகரன் பதிவு செய்துள்ளார். மேலும் மேற்படி வீட்டிற்கு புதிய மின் இணைப்பு பெற இக்கட்டிடம் 1992-ல் கட்டப்பட்டது என குறிப்பிட்டுள்ளதாகவும் ஆனால் இக்கட்டிடம் 2011-ல் தான் கட்டப்பட்டதாகவும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரிடம் நேரடி வாக்குமூலம் பெறவேண்டி இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.290/16/பே/நாள்: 18.10.2016ல் 21.11.2016ல் நேரில் ஆஜராக தெரிவிக்கப்பட்டது.

"...திரு. ஜெ. முகம்மது இப்ராகீம், செயல் அலுவலர், அதிகரெட்டி பேரூராட்சி இம்முறைமன்ற நடுவம் முன் 21.11.2016ல் ஆஜராகி கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

"...தான் மேற்படி அதிகரெட்டி பேரூராட்சியில் 08.06.2015 முதல் செயல் அலுவலராக பணி புரிவதாகவும், திரு. என். சந்திரசேகரன் அவர்களின் முறையீட்டு மனு குறித்து தனக்குத் தெரியும் எனவும் இது குறித்து தான் 08.07.2016-ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளதாவும், தற்போது திரு. நந்தி கவுடர் வீட்டின் புகைப்பட நகல் சமர்ப்பித்து, இவரது வீட்டினுடைய பக்கத்தில் முறையீட்டு மனுதாரரின் பூர்வீக நிலம் உள்ளது எனவும், தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் இந்த கிராமம் முழுவதும் நத்தம் கிராமம் பட்டா வகையினை சேர்ந்தது எனவும் தனது வாக்கு மூலத்தினை பதிவு செய்துள்ளார். திரு. என். சந்திரசேகரன், முறையீட்டு மனுதாரர் அவருடைய இடத்திற்கு பட்டா வாங்கிவிட்டதாகவும், திரு. நந்தி கவுடர் அவர்களின் மனைவி தாசில்தாரராக இருந்து ஓய்வு பெற்றவர் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு. நந்தி கவுடர் என்பவர் திரு. சந்திரசேகர் இடத்தில் வீடு கட்டிவிட்டதாக திரு. சந்திரசேகர் புகார் அளித்துள்ளார் எனவும் திரு. சந்திரசேகரன் (தம்பி) அவரது சகோதரர்கள் திரு. அசோக் குமார், திரு. ஐம்புலிங்கம் இருவரும் பேரூராட்சியின் செயல் அலுவலர்களாக இருந்து ஓய்வு பெற்றவர்கள் எனவும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளர். மேலும் கோடேரி கிராமத்திற்கு மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாலை அமைக்கப்பட்டதாகவும், இந்த சாலை சம்பந்தமாக ஊர் பிரச்சினை இருந்து வந்ததாகவும், முறையீட்டு மனுதாரர் திரு. சந்திரசேகரன் ஊரை எதிர்த்து உதகை நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து வழக்கு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர்

திரு. சந்திரசேகரன் வீட்டை சேதப்படுத்தியதாக அவரது சகோதரர்கள் மலையை விட்டு கீழே இறங்கி வசித்து வருகிறார்கள் எனவும் திரு. சந்திரசேகரன் மட்டும் அங்கேயே வசித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

திருமதி. மீனாட்சி மற்றும் திரு. நந்தி கவுடர் வீடுகளுக்கு பேரூராட்சி மூலம் வரி இழப்பு, மேலும் மீனாட்சி வீட்டிற்கு விரி போடவில்லை என்பதும் புகாராக முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஏற்கனவே மேற்படி வீடுகளுக்கு பழைய வரி அப்படியே இருந்ததாகவும் புதிய வரி ஏதும் விதிக்கவில்லை எனவும், 16.08.2016–ல் முறைமன்ற அறிவிப்பு வந்த பின்னர் அரையாண்டிற்கு ரூ.924/– என தன்னால் நிர்ணயம் செய்யப்பட்டதாகவும் பழைய வரி எவ்வளவு என்பது தனக்கு தெரியாது எனவும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு. நந்தி கவுடர் 2012ல் வீடு கட்டியதாகவும் இதுவரை இந்த வீட்டிற்கு வரி விதிப்பு செய்யப்படாமல் இருந்ததாகவும் 2012ம் ஆண்டில் இருந்து கட்டிட அனுமதியில்லாமல் வரிவிதிப்பு செய்யப்படவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

முறைமன்ற அறிவிப்பு வந்த பிறகு பேரூராட்சிக்கு வருமானம் வருவதற்காக பேரூராட்சி ஆணையரக சுற்றறிக்கை நாள்:18.08.2008ன் படி முன் தேதியிட்டு மேற்படி கட்டிட அனுமதியினை முறைப்படுத்தி அந்த இடத்திற்கு அரையாண்டிற்கு வரி ரூ.1,100/– நிர்ணயம் செய்து வரி வசூல் செய்யப்பட்டதாகவும், அதற்கான வரி விதிப்பு எண்.6070 நாள்: 08.11.2016ல் விதிக்கப்பட்ட விவரம் முறைமன்ற நடுவர் முன் சமர்ப்பிப்பதாகவும் தனது வாக்கு மூலத்தில் பதிவு செய்துள்ளார்.

திரு. நந்தி கவுடரிடம் தானே முன்னின்று சொல்லி கட்டிட வரைபடம் மனு பெற்று முறைப்படுத்தி வரி நிர்ணயம் செய்ததாகவும், திரு. சந்திரசேகரன் வீட்டை விட திரு. நந்தி கவுடர் வீடு பெரியது எனவும், திரு. நந்தி கவுடர் வீட்டிற்கு எவ்வளவு வரிவிதிப்பு என்பது நினைவில் இல்லை எனவும் தெரிவித்துள்ளார், புதிய கதவு எண்.11/243 வரி விதிப்பு எண்.3613 திரு. எஸ். ஈஸ்வரன் என்பவரின் வீட்டு விவரத்தினை மனுதாரர், கதவு எண்ணை மாற்ற தகவல் அறியும் உரிமைச் சட்டத்தில் விவரம் கோரியிருந்தார் எனவும் உண்மையில் திரு. மணி சகோதரர் வீட்டிற்கு வரி விதிக்கப்படவில்லை எனவும், இது குறித்து கிராம நிர்வாக அலுவலர், மனுதாரர், சம்பந்தப்பட்ட திரு. நந்தி கவுடர் ஆகியோர்களை நேரில் வரவழைத்து கள ஆய்வு மேற்கொண்டு தனது அறிக்கையினை 10 நாட்களில் சமர்ப்பிப்பதாக தனது 21.11.2016ல் நேரடியான வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண்.245/2016/ நாள்:07.12.2016ல் மேற்படி திரு. சந்திரசேகரன் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள இடத்தினை 25.11.2016 அன்று முறையீட்டு மனுதாரர், திரு. நந்தி கவுடர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் முன்னிலையில் தல ஆய்வு மேற்கொண்டதாகவும் ஆய்வின் தன்மை குறித்து கீழ்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

திரு. நந்தி அவர்களின் மனைவி திருமதி லட்சுமி தேவி என்பவர் வருவாய்த்துறையில் நீலகிரி மாவட்டம் குந்தா வட்டாட்சியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் எனவும், திரு. நந்தி என்பவர் அதிகரெட்டி பேரூராட்சி கிராமத்தில் புல எண்.1629/2 (பழைய எண்.938/3) மற்றும் அதனை ஒட்டியுள்ள மனையில் பேரூராட்சியின் அனுமதியின்றி 02.12.2010 முதல் 01.12.2011 வரையிலான காலத்தில் கட்டிடம் கட்டியுள்ளதாகவும், மேற்படி கட்டிடத்தின் ஒரு பகுதி நத்தம் நிலவரி திட்டத்தின் கீழ் திரு. நஞ்சாகவுடன் மக்கள் (1) திரு. ஜம்புலிங்கம், (2) திரு. அசோக்குமார் மற்றும் (3) திரு. சந்திரசேகரன் (முறையீட்டு மனுதாரர்) ஆகியோர்களுக்கு மனை வரி பட்டா எண்.1213 ன்படி மனைவரி தோராயப் பட்டா 30.03.2008ல் வழங்கப்பட்டதாகவும் திரு. ஜம்புலிங்கம் மற்றும் திரு. அசோக் குமார் ஆகிய இருவரும் பேரூராட்சியின் செயல் அலுவலராக இருந்து ஓய்வு பெற்றவர்கள் எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேலும் திரு. நந்தி என்பவர் திரு. மாதன் என்பவர் பெயரிலிருந்து தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்ட வரி வதிப்பு எண்.3526 கதவு எண்.9/81 என்ற வீட்டிற்கும் தற்போது அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள இடத்திற்கும் எவ்வித தொடர்பும் இல்லை எனவும் செயல் அலுவலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திரு. நந்தி என்பவர் அனுமதியின்றி கட்டிடம் கட்டியுள்ள இடம் புல எண்.1629/2 (பழைய எண் 938/3) மற்றும் அதனை ஒட்டியுள்ள இதர நத்தம் மனையாகும். ஆனால் புல எண். 966/3 கதவு எண்.9/81ல் (திரு. மாதன் என்பவருக்கு சொந்தமானது என தெரிவித்துள்ளது) கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக திரு. நந்தி என்பவர் கூறுவது ஏற்புடையதல்ல எனவும் இந்த இரு இடங்களும் வெவ்வேறு பகுதியினை சார்ந்ததாக உள்ளது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புல எண்.966/3 என்பது திரு. பீமன் மகன் திரு. பாலகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான பட்டா இடம் எனவும் கதவு எண்.9/81 என்பது திரு. கே. மாதன் என்பவருக்கு சொந்தமான பாழடைந்த வீடாகும். இந்த இடத்தினை பதிவு செய்யப்படாத கிரைய சாசனம் மூலம் இட உரிமையாளர்களிடமிருந்து கிரயம் பெற்று கட்டிடம் கட்டியதாக திரு. நந்தி என்பவர்

தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையில் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

திரு. நந்தி என்பவர் கதவு எண்.9/81 என்ற வீட்டின் உரிமையினை திரு. மாதன் என்பவர் பெயரிலிருந்து தனது பெயருக்கு பேரூராட்சி மூலம் 06.06.2012ல் பெயர்மாற்றம் செய்து பின்னர் இந்நிகழ்வின் ஆவணங்கள் தவறு என கண்டறிந்து 11.08.2014ல் மேற்படி பெயர் மாற்றம் ரத்து செய்யப்பட்டதாகவும், அனுமதியின்றி கட்டப்பட்டுள்ள இடத்தின் உரிமைக்கான உரிய **ஆவணங்களை திரு. நந்தி என்பவர் பேரூராட்சிக்கு சமர்பிக்காததினாலும்,** திரு. நந்தி அவர்களின் மனைவி திருமதி லட்சுமிதேவி என்பவர் வருவாய்த் துறையில் வட்டாட்சியராக பணிபுரிந்து வந்ததாலும் இக்கட்டிடத்திற்கு இப்பேரூராட்சியால் **கட்டிட அனுமதி வழங்காமலும் வரிவிதிப்பு செய்யாமலும் இருந்து வந்துள்ளதாகவும் பேரூராட்சியின் செயலர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.** மேலும் திரு. நந்தி என்பவர் திரு. மாதன் என்பவருக்கு சொந்தமானவரி விதிப்பு எண். 3526 கதவு எண். 9/81 வீட்டிற்கான வரித் தொகை ரூ.44/- (ஆண்டிற்கு) தொடர்ந்து செலுத்தி வந்துள்ளதாகவும், முறையீட்டு மனுதாரரின் கோரிக்கையின்படியும் உள்ளாட்சி அமைப்புகளின் முறைமன்ற நடுவ அறிவிப்பின்படியும் தல ஆய்வு மேற்கொண்டு திரு. நந்தி என்பவருக்கு 30.06.2016, 15.07.2016 மற்றும் **23.09.2016** ஆகிய தேதிகளில் நோட்டீஸ் வழங்கப்பட்டதாகவும், இதனை தொடர்ந்து திரு. நந்தி அவர்களிடம் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு 10.10.2016ல் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டிடத்திற்கு விண்ணப்பம் மற்றும் வரைபடம் பெற்று மேற்படி கட்டிடத்திற்கு (அடி மனை நீங்கலாக) நிபந்தனைகளுக்குட்பட்டு 2012-13 முதல் நாளது தேதி வரை முன்தேதியிட்டு 31.10.2016 அன்று வரி THE TAMILNADU DISTRICT MUNICAPALITIES ACT.1920 (BUILDING REGULATIONS IN HILL STATIONS ) SECTION 217 E POWER TO CANCEL உப விதி (1) (a)ல் - Such Licence has been obtained by fraud, misrepresentation or suppression of material particulars என தெரிவிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சொத்து வரி விதிப்பு எண் 6070 என அதிகரெட்டி பேரூராட்சி அலுவலக ந.க.எண். 331/2016 நாள்:01.12.2016ன்படி அரையாண்டிற்கு ரூ.1,100/- என சொத்து வரி நிர்ணயம் செய்து மொத்த நிலுவைத் தொகை ரூ.30,520/- வசூலிக்கப்பட்டு பேரூராட்சி கணக்குத் தலைப்பு எண். 1043ல் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும், **25.11.2016ம்** தேதிய கள ஆய்வின் படி திரு. நந்தி என்பவர் கட்டியுள்ள வீட்டின் அடிமனையானது முறையீட்டு மனுதாரர் திரு. என். சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமானது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, செயல் அலுவலர், அதிகரெட்டி பேரூராட்சி அவர்களின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும், அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களின் நேரடி வாக்குமூல பதிவு, மற்றும் அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் 25.11.2016ம் தேதிய தல ஆய்வு அறிக்கை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு இம்முறைமன்ற நடுவத்தால் பரிசிலிக்கப்பட்டது. அதிகரெட்டி பேரூராட்சியில் திரு. நந்திகவுடர் வீடு கட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ள சர்வே எண். 966/3ல் பத்திர பதிவுகள் குறித்தான விவரம் மற்றும் கீழ்கண்டுள்ளவாறான பிற முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக கருதப்படுகிறது.

1. திரு. நந்தி (கவுடர்) என்பவர் திரு திருநாவுக்கரசு என்பவரிடம் சர்வே எண்.966/3 ல் 200 சதுர அடியினை 21.11.2011 ல் பதிவு செய்யப்படாத ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கான பத்திரம் 02.06.2010 அன்றுதான் வாங்கப்பட்டுள்ளதால் முத்திரைத்தாள் வாங்கும் முன்னரே பத்திரம் எழுதியிருப்பது என்பது முரணானது.
2. இதே சர்வே எண். 966/3ல் 001/2 ஏக்கர் பூமியை திரு. நந்தி திரு. திருநாவுக்கரசு என்பவர் 06.02.2010ல் பத்திரம் எழுதியுள்ள நிலையில் இதற்கான முத்திரைத்தாள் 29.11.2010ல் தான் வாங்கப்பட்டுள்ளதால் இதுவும் முறையற்றதாகவே உள்ளது
3. திரு. நந்தி (கௌடர்) என்பவர் திரு. சந்திரசேகரன், முறையீட்டு மனுதாரரின் வீட்டை ஆக்கிரமித்து கட்டியுள்ள நிலையில், அதே ஊரைச் சேர்ந்த திரு. ராஜு அவர்களின் மனைவி திருமதி. சின்னம்மாள் மற்றும் அவரது மகன்கள் இருவர் சேர்ந்து திரு. நந்தி மகன் திரு. ராஜு அவர்களுக்கு மேற்படி சர்வே எண். 966/3ல் 001/2 ஏக்கர் பூமியை 02.06.2010 எழுதி கொடுத்துள்ளதும் இதற்கான முத்திரைத்தாள்களும் 29.11.2010ல்தான் வாங்கப்பட்டுள்ளது எனபதால் இந்நிகழ்வும் போலியானது என கருத வேண்டியுள்ளது.
4. அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித எண்.345/16/நாள்:07.12.2016ன்படி கட்டிட விதிமீறல்கள் பட்டியலிடப்பட்டுள்ளதுடன், முறையீட்டு மனுதாரரின் மனுவில் குறிப்பிட்டுள்ள திரு. நந்தி என்பவர் புல எண்.1629/2 (பழைய எண் 938/3)ல் கதவு எண்.9/81ல் கட்டியுள்ளதாக தெரிவித்த மேற்படி கதவு எண்.9/81 திரு. கே. மாதன் என்பவருக்கு சொந்தமான பாழடைந்த கட்டிடத்தை பதிவு செய்யப்படாத இடத்தினை ஆவணமாக சமர்ப்பித்து அதன் அடிப்படையில் 06.06.2016 திரு. நந்தி பெயரில் வரி விதிப்பு மாற்றம் எண்.3526/நாள்:06.06.2016-ன் மூலம் பேரூராட்சியால் செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

5. இதன் மூலம் திரு. நந்தி என்பவர் அனுமதியின்றி கட்டியுள்ள கட்டித்திற்கு பழைய பாழடைந்த வேறொரு நபர் பெயரிலுள்ள செல்லத்தகாத ஆவணத்தைக் கொண்டு பெயர் மாற்றம் செய்து மிகக் குறைந்த வரியான ரூ. 44/- (அரையாண்டிற்கு) செலுத்தி வருவதற்கு **பேரூராட்சி நிர்வாகமும் உடந்தையாக இருந்துள்ளது.**

6. இம்முறைமன்ற நடவடிக்கைக்குப் பின் 25.11.2016ல் தல ஆய்வு செய்து திரு. நந்தி என்பவர் அனுமதியின்றி கட்டியுள்ள கட்டித்திற்கான வரைபட அனுமதி அளித்து 10.10.2016 முதலே அவரின் வீட்டிற்கு வரி விதிப்பு எண். 6070 ன் மூலம் அரையாண்டிற்கு ரூ.1100/- என நிர்ணயம் செய்து மொத்தம் ரூ.30,520/- பேரூராட்சியால் வசூலிக்கப்பட்டு பேரூராட்சி கணக்குத் தலைப்பு எண்.1043ல் வரவு வைக்கப்பட்டுள்ளது.

7. அனைத்திற்கும் மேலாக முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்றத்தினை அணுகிய பின்னர் இம்முறைமன்ற நடுவத்தின் ஆணைக்குப் பின்னர் தான் மேற்படி இடத்தினை பேரூராட்சியின் செயல் அலுவலர் ஆய்வு மேற்கொண்டு வழக்கின் இடம் திரு. நந்தி என்பவருக்கு சொந்தமானதல்ல, முறையீட்டு மனுதாரருக்குரியது என கண்டறிந்து **அவருக்கு ஏற்கனவே அளிக்கப்பட்ட வரி விதிப்பினை 01.12.2016 ல் ரத்து செய்துள்ளார்.**

8. மேலும் திரு. நந்தி என்பவர் முறையீட்டு மனுதாரர் திரு. என். சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமான பட்டா இடத்தில் கட்டிடம் கட்டியுள்ளதாகவும், இதர இடத்திற்கு ஆவணங்கள் ஏதுமில்லாததால் இந்த கட்டிடம் அனுமதி பெறாத கட்டிடம் என அதிகரெட்டி பேரூராட்சி செயல் அலுவலரால் முறைமன்ற நடவடிக்கைக்கு பின்னர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட விவரங்களில் இருந்து இப்பேரூராட்சியில் பெயர் மாற்றம் செய்யப்படும்போதோ, அனுமதி / வரி நிர்ணயம் செய்யப்படும்போதோ எந்தவிதமான அடிப்படை ஆவணங்களையும் பரிசீலிக்காமலும், முழுமையான தள ஆய்வு இன்றியும் விதிகளுக்கு முரணாக பதிவு செய்யப்படாத, செல்லத்தகாத ஆவணங்களின்பேரிலும் வரிவிதிப்பு பணிகள் நடைபெற்றுள்ளது உறுதியாகிறது.

எனவே இத்தகைய முறைகேடுகளுக்கு காரணமான பொறுப்பான அலுவலர்கள்/பணியாளர்கள் மீது துறைவாரியான ஒழுங்கு நடவடிக்கை எடுத்திட, பேரூராட்சிகளின் இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரைக்கின்றது. முறையீட்டு மனுதாரருக்கு உரிய தீர்வினை உடனடியாக வழங்க தக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும், இப்பேரூராட்சியில் இதுபோன்ற முறைகேடான வரிவிதிப்பு/பெயர் மாற்றம் மற்றும் கட்டிட அனுமதி போன்றவைகள் மேலும் நடைபெற்றுள்ளதா என்பதை கண்டறிந்து இம்முறைமன்ற நடுவ அமைப்பிற்கு சமர்ப்பிக்கும்வண்ணம் ஒரு குழுவினை அமைத்து கண்காணிக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 22 ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 31/8

**பெறுநர்**
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை.

நகல்

1. திரு. என்.சந்திரசேகரன்,
   11/156 கோடேரி,
   கோடேரி அஞ்சல்,
   நீலகிரி – 643 213.

2. செயல் அலுவலர்,
   வரித்தண்டலர்,
   அதிகரெட்டி பேரூராட்சி
   பாலகொலா, அதிகரெட்டி அஞ்சல், நீலகிரி மாவட்டம்.